**செய்தி வெளியீடு எண்: 826** **நாள்:03.11.2020**

**<u>செய்தி வெளியீடு</u>**

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரைக்கிணங்க, வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறைத் திருத்தம், 2020 மற்றும் நடைபெறவிருக்கும் தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல், 2021 தொடர்பாக பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மாநிலம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதன் ஒரு பகுதியாக தேர்தல் நடைமுறைகளில் பொதுமக்களின் பங்கேற்பினை அதிகரிக்கும் விதமாக மாநில அளவில் தேர்தல்கள் தொடர்பான இணையவழி போட்டிகள் தலைமைத் தேர்தல் அதிகாரி, தமிழ்நாடு அலுவலகத்தின் இணைய தள முகவரியான "www.elections.tn.gov.in" ல் கீழ்க்கண்ட பிரிவுகளில் நடைபெறவுள்ளது.

அ) சுவரொட்டி வரைதல்
ஆ) கவிதை மற்றும் பாடல்கள் எழுதுதல்
இ) வாசகம் எழுதுதல்

இப்போட்டியில் ஆர்வமுள்ள பொதுமக்கள்அனைவரும் பங்கேற்கலாம். தலைமைத் தேர்தல் அதிகாரி, தமிழ்நாடு அலுவலகத்தின் தேர்தல் இணையதளத்தில் 'SVEEP போட்டி 2020 – இயங்கலை (Online) போட்டிகள்' என்ற இணையவழி ( web portal) மூலமாக பஙகேற்கலாம். இப்போட்டிகள் அனைத்தும் இணைய தளம் மூலமாக மட்டுமே நடத்தப்படும். இந்தியாவில் தேர்தல்கள் மற்றும் 100% வாக்காளர் பட்டியல் பெயர்பதிவு மற்றும் வாக்குப்பதிவினை அடைவதற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகள் என்பதே இப்போட்டியின் முக்கிய கருத்துருவாகும். இப்போட்டியில் 18.11.2020 மாலை 5 மணி வரை பங்கேற்கலாம். வெற்றியாளர்களுக்கு வழங்கப்படும் பணபரிசின் விவரங்கள் பின்வருமாறு

| | |
|---|---|
| முதல் பரிசு | ரூ.10,000/– |
| இரண்டாம் பரிசு | ரூ.7,000/ |
| மூன்றாம் பரிசு | ரூ.5,000/ |

மேலும் இத்துறை, நடைபெறவிருக்கும் தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலுக்காக தேர்தல் விழிப்புணர்வு தொடர்பான குறும்படம்/உயிர்ப்பூட்டல் படங்கள்/தேர்தல் பாடல்கள்/ GIF/Memes போன்றவைகளைத் தயாரிக்கும் பொருட்டு ஆர்வமுள்ள ஊடக நிறுவனங்கள்/தனிநபரிடமிருந்து விலைப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. இதன் விவரங்கள் தலைமைத் தேர்தல் அதிகாரி, தமிழ்நாடு அலுவலகத்தின் இணைய தள முகவரியான "www.elections.tn.gov.in" அறிவிக்கை எண் 2846/தேர்தல்கள்–7/2020-1, நாள்:03.11.2020 ல் வெளியிடப்பட்டுள்ளது. விலைப்புள்ளிகளைச் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள்:18.11.2020 மாலை 5 மணி.

தலைமைத் தேர்தல் அதிகாரி மற்றும்
அரசு செயலாளர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**